**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW17 (PW11) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 09.12.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. சிவகுமார் | Father Name | : | திரு.கனகராஜ் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 27.10.2021 அன்று கந்திகுப்பம் காவல் நிலையத்தில் இரவு 11.00 அலுவலில் இருந்தபோது ஒரப்பம் கிராம நிர்வாக அலுவலர் செல்வம் த.பெ முனுசாமி நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின்பேரில் குற்ற எண். 325/2021 பிரிவு 174 கு.வி.மு.ச Suspicious Death ஆக வழக்கு பதிவு செய்து ஜெ.எம்– 1 நீதிமன்றம் கிருஷ்ணகிரி அவர்களுக்கு துரித தபால் மூலம் அனுப்பி வைத்தும் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு FIR நகலை அனுப்பி வைத்தும். புலன் விசாரணைக்காக வேண்டி பர்கூர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு FIR நகலை பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த முதல் தகவல் அறிக்கை **EX.P.17** ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அந்த முதல் தகவல் அறிக்கையை நான் கைப்பட தயார் செய்தேனா இல்லை வேறு யாரோ ஒரு நபர் கொண்டு தயார் செய்யப்பட்டதா என்று சொன்னால் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் அதனை டைப் செய்வதற்கு CCTNS ஆட்கள் உள்ளார்கள் அவர்கள் தான் டைப் செய்தார்கள் . முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை Special Messenger மூலம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பிவைத்தேன் . புகாரின் மீது நான் ஏதும் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான் . வழக்கு பதிவு செய்து அதனை ஆய்வாளர் பார்வைக்கு மட்டும் வைத்தேன் . புகாரை பெற்று எங்கள் உயர் அதிகாரியிடம் ஏதேனும் ஆலோசனை பெற்றேனா என்று சொன்னால் புகார் வந்த விவரத்தை மட்டும் அவரிடம் சொன்னேன் . புகாரை காவல் நிலையத்தில் நாங்கள் தயார் செய்து அதில் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து பெற்று இருக்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW14 (PW10) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 09.12.2024 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.ராஜ்குமார் | Father Name | : | திரு. கோபால் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 28.10.2021 அன்று நான் பணியில் இருந்தபோது கந்திகுப்பம் காவல் நிலைய குற்ற எண் .325/2021 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 40 வயது மதிக்கதக்க ரசீத் என்ற ஆண் பிரேத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி பர்கூர் காவல்ட வட்ட ஆய்வாளர் அவர் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் . பிரேதத்தை முதல் நிலை காவலர் 1978 திருமதி. மைதிலி என்பவர் அடையாளம் காட்ட மாலை 3.55 மணியளவில் பிரேத பரிசோதனை தொடங்கினேன் .

அந்த வேண்டுகோள் கடிதம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டுவது தான் அந்த வேண்டுகோள் கடிதம் **Ex.P.12** ஆகும். பிரேத்தின் மீது உடல் முழுவதும் பிரேத விரைப்பு தன்மை காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகல்கள் நீள நிறத்தில் காணப்பட்டது.

**பிரேதத்தின் மீது இறப்பிற்கு முன்பு உண்டான காயங்கள் பின்வருமாறு**

**காயம்–1** : சிவந்த சிராய்ப்பு காயங்கள் இடது கையின் பின்புறத்தில் 4X4 செ.மீ அளவிலும், இடது முழங்கையின் பின்புறத்தில் 8X4 செ.மீ அளவிலும் , வலது கால் முட்டியில் 4X2 செ.மீ அளவிலும், இடது கால் முட்டியில் 6X6 செ.மீ அளவிலும், இடது காலின் மேல்புறத்தில் 8X6 செ.மீ அளவிலும் , கால் நடுப்பகுதியில் 6X5 செ.மீ அளவிலும், காலின் கீழ்புறத்தில் 5X4 செ.மீ அளவிலும், இடது பாதத்தில் 4X4 செ.மீ அளவில் காணப்பட்டது.

**காயம்–2** : வலது தோள்பட்டையில் மேல் பகுதியில் 8X6x2 செ.மீ அளவில் சிவந்த கன்றிய காயம் காணப்பட்டது.

**காயம்–3** : இடது முன் தலை பகுதியில் 2.5X1X1 செ.மீ அளவுள்ள கிழந்த காயம் காணப்பட்டது.

**காயம்–4** : நடு மண்டை பகுதியில் 9X2X1 செ.மீ அளவுள்ள கிழிந்த காயமும், அதை சுற்றி 4X3 செ.மீ சிராய்ப்பு காயம் காணப்பபட்டது.

**தலை:** தலையை ஆய்வு செய்த போது இடது முன் தலையில் 4X4 செ.மீ அளவுள்ள சிவந்த கன்றிய காயமும், நடு மண்டை பகுதியில் 10 X8 செ.மீ அளவுள்ள சிவந்த கன்றிய காயமும் காணப்பட்டது. கபால எலும்புகள் சீராக இருந்தது. மூளையின் முன்பகுதியில் இரு புறத்திலும் பரவளான இரத்த கசிவு காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதி சீராக இருந்தது.

**நெஞ்சி:** நெஞ்சி மற்றும் வயிற்று பகுதியில் ஆய்வு செய்த போது நெஞ்சின் மேல் புறத்தில் 6X4 செ.மீ அளவுள்ள சிவந்த கன்றிய காயமும் , அதன் அடியிலுள்ள நெஞ்சு எலும்பு முறிந்து காணப்பட்டது.

**எலும்பு :** வலதுப்புற 4 மற்றும் 5 விலா எலும்புகள் உடைந்து காணப்பட்டது.

**நுரையீரல்:** இரு நுரையீரல்களும் அளவில் பெரியதாகவும் , வீக்கியும் காணப்பட்டது, அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் அதிக அளவில் நுரையுடன் கூடிய கசிந்த வண்ணம் காணப்பட்டது . மூச்சு குழாயிலும் நுரையுடன் கூடிய திரவம் காணப்பட்டது.

நாவடி எலும்பு மற்றும் கழுத்து எலும்புகள் சீராக இருந்தது. வயிற்றில் 200 மி அளவுள்ள பழுப்பு நிறமாக காணப்பட்டது பழுப்பு நிறம் ஒரு வித நெடியுடன் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் இரத்த செரிவுடன் காணப்பட்டது . பிரேத பரிசோதனையின் போது உடல் உள்ளுறுப்புகளை இராசயன பரிசோதனைக்காகவும் , டையாட்டம் (Diatom) பரிசோதனைக்காகவும் அனுப்பி வைத்தேன் . என்னுடைய கருத்துரையை நிறுத்திவைத்து பிரேத பரிசோதனை சான்று வழக்கினேன் அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **EX.P.13** ஆகும். தருமபுரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிக்கை DPI /Tox –H/1199/2021 and DPI / Biol /394/2021 ஆகிய அறிக்கைகளை பெற்று 22.12.2021 அன்று என் இறுதி கருத்துரையை வழக்கினேன் .

அந்த இறுதி கருத்துரையில் மேற்கண்ட நபர் தண்ணீரில் முழ்கியதால் மூச்சு திணறல் காரணமாகவும் , தலையில் ஏற்பட்ட காயத்தினாலும் உண்டான மூளையின் இரத்த கசிவினாலும் இறந்திருக்ககூடும் என்றும் , அவர் இறப்பிற்கு எத்தில் ஆல்கஹால் மது அருந்தி இருந்தார் என்று என்னுடைய இறுதி கருத்துரை கொடுத்தேன் . அந்த விசரா ரிப்போட் **E.x.P.14. ,** Biological Report **Ex.P.15** . இறுதி கருத்துரை **EX.P.16** ஆகும். இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

என்னுடைய முதல் விசாரணையில் இறந்து போன நபர் தண்ணீரில் எவ்வளவு நேரம் இருந்தார் என்பது பற்றி நான் ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். சுற்று சுவர் இல்லாத கிணற்றில் ஒரு நபர் தவறி விழும் போது அந்த கிணற்றிலுள்ள திட்டில் மோதி அதன் பின்னர் கிணற்றிலுள்ள நீரில் விழும்போது நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று காயங்கள் ஏற்படுவதற்ககு வாய்ப்புள்ளதா என்று சொன்னால் வாய்ப்பு இருக்கிறது. இறந்து போன நபர் அளவிற்கு அதிகமாக மது அருந்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் மது அருந்தியதாக மட்டும் தான் அறிக்கையில் சொல்லப்பட்டடுள்ளது . விசாரா ரிப்போட்டில் மேற்கண்ட நபரின் உள்ளுறுப்புகளை ஆய்வுக்கு அனுப்பியபோது அவர் உள்ளுறுப்புகளில் எவ்வளவு மில்லி அளவிற்கு ஆல்கஹால் உள்ளது என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி விசாரா ரிப்போட்டில் சொல்லப்பட்ட அளவில் ஒரு நபர் மது அருந்தியுள்ளபோது அவர் இயல்பாக இயங்க முடியாது என்று சொன்னால் அது ஒவ்வொரு நபருக்கு வேறுப்படும் . அந்த நபர் மது அருந்திவிட்டு உயிருடன் இருக்கும்போது தான் அவரை பார்த்து பரிசோதனை செய்ததால் தான் அதைப்பற்றி சொல்லமுடியும் . தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களை போலீசார் விசாரிக்கும்போது வாக்குமூலம் கொடுத்து

உள்ளேனா  என்று சொன்னால் இதைப்பற்றி போலீசார் கேட்கவில்லை அதனால் கொடுக்கவில்லை

VASUDEVAN DAMODARAN

Additional District Judge

Digitally signed by VASUDEVAN DAMODARAN